**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

**EA.No.6/2025 In Ep.No.2/2023 In OS.No.89/2020**

Deposition of the P.W.2. witness for

Name : ராஜேஷ்குமார்
Father's Name :

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date : 09.02.2026

Solemnly affirmed by Thiru/Tmt. Bench Clerk Grade-III, Principal District Munsif Court, Padmanabhapuram in accordance with the Provision of Act XLIV of 1893.

முதல் விசாரணை.

1. காட்டாத்துறை பண்டாரவிளை காலனியை சேர்ந்த தாஸ் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். எதிர்மனுதாரான ஸ்ரீதேவியை தெரியுமா என்றால் தெரியும். ஸ்ரீதேவி தாஸ்க்கு ஒரு கிரைய ஒப்பந்தம் 2019 ஆண்டு மார்ச் மாதத்தில் எழுதிக்கொடுத்தரர். மேற்சொன்ன கிரைய ஒப்பந்ததை பள்ளியாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் எழுதிக்கொடுத்தார். மேற்சொன்ன கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட ஆவணம். மேற்சொன்ன ஆவணத்தில் நான் 2 ஆம் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னுடன் செல்வராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். தற்போது செல்வராஜ் உயிருடன் இல்லை. மேற்சொன்ன கிரைய ஒப்பந்தத்தில் எங்கள் முன்னிலையில் தான் ஸ்ரீதேவி மற்றும் தாஸ் கையொப்பம் செய்தார்கள். ஸ்ரீதேவிக்கு சொந்தமான வால்வச்சகோசம் பி-கிராமம் சர்வே எண்.249/1 ல் உள்ள 21 செண்ட் சொத்து ரூ.1,60000/- தாஸ்

என்பவருக்கு கிரையம் கொடுக்க சம்மதித்து ரூ.1 லட்சம் முன்பணமாகவும், மீதமுள்ள ரூ.60,000/- 1 வருட காலத்திற்கு பிறகு கிரையம் பெற்றுக்கொள்வதாக எழுதப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை</u>

1. தாஸ் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். தாஸ் என்பவரை மேற்சொன்ன கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பே தெரியுமா என்றால் தெரியும். மேற்சொன்ன தாஸ் என்பவர் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்துவருகிறார் என்றாலும் அதன் அடிப்படையில் பல ஒப்பந்தகள் எங்களுடைய அலுவலகத்தில் ஏற்படுத்தியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன் கிரைய ஒப்பந்தை தவிர வேறு ஏதாவது கிரைய ஒப்பந்தம் உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது. ஏ.மா.சா.ஆ.1 ஆவணம் எங்கள் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. ஏ.மா.சா.ஆ.2 ஆவணமும் எங்கள் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான் ஆனால் அந்த ஆவணத்தை பற்றி தெரியாது. மேற்சொன்ன 2 ஆவணங்களைப்பற்றி எனக்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன தாஸ் மற்றும் ஸ்ரீதேவி ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தம் வட்டிக்கு பணம் கொடுத்து எழுதப்பட்ட ஆவணம் என்றால் அவர்களின் தனிப்பட்ட பரிவர்த்தனைகளை பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்ததில் கையொப்பமிட்ட அதே தேதியில் ஒரு ரத்து பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் மட்டும் தான் செய்தேன் என்றாலும் அவர்களுடையே உள்ள தனிப்பட்ட பண பரிவர்த்தனைகளைப்பற்றி எனக்கு தெரியாது. நான் சாட்சி கையொப்பம் செய்த கிரைய ஒப்பந்தம் உண்மையிலேயே கிரைய ஒப்பந்தம் இல்லை என்றாலும் வட்டிக்கு பணம் கொடுத்து அதற்கு ஈடாக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாராக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் என்னுடைய சாட்சி சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.